[1982 பிப்ரவரி 10

திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரார்களே, இதுவரையில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட புயல் பாதுகாப்பு இல்லங்கள் மொத்தம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 25 இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, அவர்கள் இருபது இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து இதைப் போன்று கட்டுவதற்குப் பணம் தருவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றது.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெற்றிருக்கிற நிலம் அவர்கள் எந்தக் காரியத்திற்காகக் கேட்டார்களோ அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்துகிறார்களா என்பது கண்காணிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எந்த நிறுவனத்திற்கும் எவ்வளவு நிலம் கொடுத்தாலும் அந்த நிறுவனம் எதற்காக கேட்கிறதோ அதற்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று கண்டிஷன் போட்டு அவர்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட கண்டிஷனிலே இருந்து அவர்கள் விலகிச் செல்வார்களேயானால் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமலேயே அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது.

திரு. மு. சுந்தரம் : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே இந்தியா ஸ்டீல்ஸ் என்ற தொழிற்சாலை இருக்கின்றது. அந்த தொழிற்சாலையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பல மைல் தூரத்திலே இருந்து வேலைக்கு வருவது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வீட்டுமனை வேண்டும் என்று அரசிடத்திலே கோரி இருக்கிறார்கள். ஆகவே..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி டிசாஸ்டர் ரிலிப் சென்டர் ஏற்படுத்துவது பற்றி. ஆகவே, வீடுகட்ட நிலம் பற்றி இப்போது கேட்கக் கூடாது.

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையின் 125ஆவது பிறந்த நாள் விழா.

*வினா எண் 125—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பெரியார்களுக்கு அரசின் சார்பில் விழா எடுக்கும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் யார் யாருக்கு விழா எடுக்கப்பட்டது ?

1982 பிப்ரவரி 10]

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து வழங்கிய மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் 125 ஆவது பிறந்த நாள் விழா அரசின் சார்பில் கொண்டாடுவதற்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ்நாடு அரசு 1979-80 ஆம் ஆண்டு, பாரதிதாசன், சோமசுந்தரபாரதியார், பாவலர் செய்குதம்பி, வ.உ.சி., பாரதியார், பேரறிஞர் அண்ணா, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, ராஜாஜி, திருவள்ளுவர், டாக்டர் உ.வே.சு.ஐயர், வீரமாமுனிவர் ஆகிய தமிழ்ப் பெரியார்களுக்கு விழா எடுத்தது.

ஆ) 1979-80-ல் மனோன்மணிய நா சுப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 125 ஆவது விழான் க் கொண்டாட உத்தேசித்து அது இயலாமல் 127 ஆவது ஆண்டு விழாவாக 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது.

(முற்பகல் 9-20)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார்களுக்கு அரசின் சார்பில் விழா எடுக்கும் வகையில் மறைந்த நமது பெரியவர் திரு. வி. கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் விழா எடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ? அதைப் போலவே மாயவரத்தில் கவிஞர் வேதநாயகம் அவர்கள் பெயராலே விழா எடுக்க அரசு இந்த ஆண்டு முயற்சி எடுத்தும் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வராத காரணத்தினால், அது ஒத்தி வைக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டு விட்டதே. அதைத் தொடர்ந்து, திருவையாற்றில் ஆண்டுதோறும் நடக்கிற தியாக பிரம்ம உற்சவத்தைப் போல் கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கும் விழா எடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அந்த விழாவினைக் கொண்டாடுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. நிச்சயமாகக் கொண்டாடும். திரு. வி.க. அவர்களுக்கு விழா கொண்டாடுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருவையாற்றில் நடைபெறும் தியாகப் பிரம்ம உற்சவ விழாக்களை, வானொலியிலும், (டி.வி.) தொலைக் காட்சியிலும் நேரடி அஞ்சல் செய்து ஒலி/ஒளி பரப்புவதைப்போல, கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கு எடுக்கும் விழாவினையும், தமிழிலே முதல் நவீனத்தை எழுதியவர் என்ற முறையிலும், தமிழிலே பல அறிய கவிதைகளை எழுதிய பெரியவர் என்ற முறையிலும், வானொலியிலும், தொலைக் காட்சியிலும் நேரடி அஞ்சல் செய்வதற்கு தமிழக அரசு ஆவன செய்ய முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசு எடுக்கிற விழாக்களுக்கு, தொலைக்காட்சி நிலையத்தின ரையும், வானொலி நிலையத்தினரையும், நேரடி அஞ்சல் செய் வதற்கான முறைகளுக்காக அழைப்பு அனுப்புவோம். அவர்கள் வந்து அந்தப் பணியைச் செய்வார்கள். ஆகவே, இந்த விழாவை எடுக்கிறபோதும் அந்த ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படும்.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார்களுக்கு விழா எடுப்பதைப்போல, 1965-ல் தாய் மொழி நம் தமிழ் மொழிதான் என்று போராட்டத்தில் ஈடுபட்டு, வெங் காடுமைச் சாக்காட்டில், வெந்தணலில் வீழ்ந்து, சிறகொடிந்த பறவைகள் போல் தங்கள் இன்னுயிரை ஈந்த, தமிழ் இளைஞர்களுக்கு, அவர்களின் நினை வாக, ஜனவரி 25 ஆம் தேதியை தமிழக அரசு வீர வணக்க நாளாக பிரகடனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்குத் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் நீதிபோதனை வகுப்புகள்.

*வினா எண் 126—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் நீதிபோதனை (Moral Instruction வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் மீண்டும் தொடங் கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை வரும் கல்வி ஆண்டிலேயே அமுலுக்குக் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது அமுலில் இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளி களில் நீதி போதனை வகுப்புகள் அமுலில் இருப்பதாகச் சொன் னார்கள். அதற்காக நன்றி. ஆனால் 3 மாதங்களுக்கு முன்னால் நாளேடுகளில் வந்த செய்தியின்படி மீண்டும் அந்த மாரல் இன்ஸ் டிரக்ஷன் செக்ஷனை உயர்நிலைப் பள்ளிகளில் துவக்க இருப்ப